# திருமந்திரம் காட்டும் அறம்

முனைவர் கி.அய்யப்பன்

கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,

உ. நா. அரசினர் கல்லூரி,

பொன்னேரி- 601 204

Dr. K. Iyyappan

Guest Lecturer, Department of Tamil,

L.N. Government College, PonnerI- 601204

**Abstract**

*Literary geniuses identify virtue at every stage and make it known to the society. The literature emphasizes that we should do what we can in our lifetime, and when we are not in the mood to give anything to help others, we should have the attitude of giving at least a portion of the food we eat to others.*

*Thirumoolar mentions that if you do not maintain virtue, you will face various sufferings. If you do not do virtue, pollution will arise in your mind. Wisdom cannot be attained.*

*Even if you are rich, you cannot give charity. Even if you have an eye, you may end up blind. He mentions that a non-virtuous person cannot save himself when eman comes, even if he has innumerable things to save himself. Emphasizing such auspicious thoughts, Thirumatram also mentions principles such as impermanence, non-killing, non-eating of grass, non-violence, and hypocrisy as the basis for austerity.*

*Thirumantram says that people should not forget morals. By following the moral principles of Thirumantram, love and grace will be established and the human race will be able to have a stable life.*

**முன்னுரை**

திருமந்திரம் உலக மக்கள் பின்பற்ற வேண்டிய அறவாழ்வைப் புகழ்கின்றது. வாழ்நாளில் நம்மால் இயன்றதை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்றும், எதையும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவும் தன்மை இல்லாத போது உண்ணும் உணவில் ஒரு பங்கையாவது பிறருக்கு கொடுக்கும் தன்மை வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

அறத்தை ஒவ்வொரு கால கட்டத்திலும் இலக்கிய மேதைகள் அடையாளம் கண்டு சமூகத்திற்கு அறியத் தருகிறார்கள். அறத்தைப் பேணவில்லையெனில் பல்வேறு துன்பங்களை அடைய நேரிடும் என்று திருமூலர் குறிப்பிடுகிறார். அறம் செய்யாவிட்டால் மனதிலே மாசு உருவாகும். ஞானத்தை அடைய முடியாது. செல்வம் நிறைந்திருந்தாலும் தானதர்மம் செய்யமுடியாது. கண் இருந்தும் குருடர் என்ற நிலையையே அடைய நேரிடும். தன்னைக் காப்பாற்ற எண்ணிலடங்கா பொருட்கள் வைத்திருந்தாலும், காலன் வரும்போது அறம் செய்யாத ஒருவரால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது என்று குறிப்பிடுகிறார். இவ்வாறான, அறவாழ்வுச் சிந்தனைகளை வலியுறுத்தும் திருமூலர் அறவாழ்வுக்கு அடிப்படையான நிலையாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை போன்ற நெறிகளையும் கூறுகின்றார். அவர் குறிப்பிடும் அறவாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

**அறம் என்பது**

'அறு' என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்ததே 'அறம்' என்னும் சொல்.இச்சொல் அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து போன்ற பொருள்கள் குறித்து வருகின்றன.

ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனப் பாவகை விரி நாலாயிற்று என வகுத்தத் தொல்காப்பியர்,

"அந்நிலை மருங்கின் அறம் முதலாகிய

மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (Puliyur kesikan, 2009)

என்று கூறுகிறார்.

அறமானது அருள் என்ற உணர்வினால் தோன்றுகிறது. இதனை "அருள் உணர்வினால் தோன்றும் நெறி, நன்னெறி மட்டுமல்ல! அது, தீது இல் நன்னெறியாகும். அரியது: பொது மனித வாழ்க்கைக்குரியது, அறவாழ்வினனாக ஆக்குவது, அனைவரது புகழ்ச்சிக்கும் உரியது"(Ramasamy, 1992).

மேலும், அறம் என்னும் சொல்லிற்குப் பின்வருமாறு விளக்கம் கூறலாம்.மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின்முழுநிறை வடிவமே அறம் என்று கூறலாம்.'பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்' என்ற ஆன்மீக விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு.உலகம் 'சீரழிந்து' கொண்டிருந்தாலும், யுக யுகமாக உலகைத் தாங்கிப் பிடித்து நிற்கும் மிக இன்றியமையா விழுமியமாகஅறம் இருக்கிறது.

**இயன்ற இடமெல்லாம் அறம் செய்க**

வாழ்விற்கான பயன் அறம் செய்வதே என்று கருதி, இயன்றதை மற்றவர்களுக்குக் கொடுத்து வாழவேண்டும்.வாழ்வில் இன்பமானது அறச்செயல் செய்வதனாலேயே நிகழும். அறச்செயல் செய்வதால் வரும் இன்பமே உண்மையான இன்பம். மற்ற வழியில் வரும் இன்பம் எல்லாம் இன்பம் ஆகாது. அந்த இன்பமான வாழ்வை பெற இயன்றவாறெல்லாம் அறத்தை மறக்காமல் செய்ய வேண்டும் என்பதை, 'ஒல்லும் வகையான் அறவினை' என்பார் வள்ளுவர். உண்ணும்போது சிறிதாயினும் பிறருக்குக் கொடுத்து உண்ணுங்கள் என்று,

"அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்

வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வல்மின்

செவ்வியனாகிச் சிறந்துண்ணும் போதொரு

தவ்விகொடுமின் தலைப்பட்ட போதே"(Manikkavasakan, 2016)

என்றும்,

"யாவர்க்கும் மாம்உண்ணும்போது ஒரு கைப்பிடி"(Manikkavasakan, 2016)

என்றும், திருமூலர் இயலுமிடமெல்லாம் தவறாது அறம் செய்க என வலியுறுத்துகிறார்.



© 2023, IRJTSR 

செல்வத்தின் பயனே ஈதல் என்று ஈவோரின் சிறப்பை புறநானூற்றின் 204-ஆவது பாடல் கூறுகிறது. இக்கருத்தினையே திருமூலரும், கடல்நீர் பெரிதாயினும் நீர் வேட்கையார்அதனிடத்து செல்லாமல், கூவலும் குளமும் சிறிதாயினும் அதனிடத்தே செல்வதுபோல, ஈயும் செல்வரிடத்தே சென்று இரவலர்கள் இரவல் பெறுவர். ஈகை செய்யாதவரிடத்து ஒருபோதும் இரவலர்கள் செல்ல மாட்டார்கள் என்பதை,

“அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்

கற்றன போதங் கமழ்பவர் மானிடர்

உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்

பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே”(Manikkavasakan, 2016)

என்று குறிப்பிடுகிறார். அறநெறிகளையும், அறம் செய்வோரையும் குறிப்பிட்ட திருமூலர், அறத்தினைச் செய்யாது பொழுதினைக் கழிப்பவரையும் சாடி அறவாழ்வின் தன்மையை விளக்குகிறார். அறத்தை நினையாதவர் சிவபெருமானின் திருவடியை நினைக்கும் முறையையும் அறியமுடியாது என்றும், நரகமே புகுவர் என்றும் திருமூலர் குறிப்பிடுகிறார். இவ்வாறாக அறம் செய்வோரின் திறத்தையும், செய்யாதவரின் இழிவையும் காட்டி அறவாழ்வின் தேவையைத் திருமூலர் உணர்த்துகிறார்.

**நிலையில்லா உலகில் நிலையான அறத்தை செய்க**

நிலையில்லா உலகில் எப்பொருளும் நிலையற்றவையே. உலகம் மட்டுமல்லாது இளமை, செல்வம், யாக்கை, உயிர் என யாவும் நிலையில்லாது இருப்பது போல் தோன்றி குறிப்பிட்ட கால எல்லைக்குள் மறைந்து போகும் தன்மை கொண்டது. இந் நால் வகை நிலையாமையை உணர்த்திய திருமூலர், இறுதியில் இவ்வாறான நிலையற்றப் பொருள்களை எண்ணி காலத்தைக் கழிக்காமல், நிலையான அறத்தை விரைந்து செய்ய முற்பட வேண்டும் என உணர்த்துகிறார். யாக்கை குறிப்பிட்ட கால எல்லைக்கு உட்பட்டது. அது அழியும் தன்மை கொண்டது என்று குறிப்பிட்டு, அது போல் செல்வமும் நிலையற்றது எனக்காட்டுகிறார். அதாவது தமது நிழல் தம் வெயில் வெப்பத்தைத் தணித்துக் கொள்வதற்கு உதவாமையைக் கண்டு வைத்தும், அறிவிலார் தமது செல்வம் தம் துன்பத்தைப் போக்கிக்கொள்ள உதவும் என எண்ணுகின்றனர். உயிர் உடம்போடு ஒன்றாய் பிறந்தாலும் அது உடம்பில் நின்று அதனைக் காப்பாற்றாது இடையே விட்டொழியும். அவ்வாறாக வேறாய் வந்த செல்வமும் அறிவது தான் என்பதை,

“தன்னது சாயை தனக்குத வாதுகண்

டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்

உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது

கண்ணது காணொளி கண்டுகொ ளீரே” (Manikkavasakan, 2016)

எனக் குறிப்பிடுகிறார்.

யாக்கையும் செல்வமும் போல இளமைத் தன்மையும் விரைவில் நீங்ககூடிய தன்மை கொண்டது. எனவே இளமை நீங்கி முதுமை வரும் காலத்திற்குள் சிவபெருமானை நினைந்து அவன் திருவடியை அடைய வேண்டும் என்று குறிப்பிட்டு, அவ்வாறு அடைபவருக்கு அவன் இன்பத்தையே வழங்குவான் என்பதை,

“காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்

மாலை படுவதும் வாழ்நாள் கழிவதும்

சாலும்அவ் வீசன் சலவிய னாகிலும்

ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே”(Manikkavasakan, 2016)

என்று காட்டி, உயிரும் விரைவில் அழியும் தன்மை கொண்டது என நிலையாமையை உணர்த்தி, அதற்குள் அறத்தைச் செய்து, அற வாழ்வினை வாழ முற்பட வேண்டும் என்பதை,

“அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்

வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்

செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு

தவ்விகொ டுமின் தலைப்பட்ட போதே” (Manikkavasakan, 2016)

என்று குறிப்பிட்டு, மன்னா உலகில் யாவும் மன்னா என்பதை உணர்ந்து அதற்குள் அறத்தைச் செய்க என வலியுறுத்துகிறார்.

**உயிர்களைக் கொல்லாமை**

உயிர்களுக்கு எவ்வித தீங்கும் நினையாது, கொல்லாமை என்னும் அற நெறியில் நிற்கவேண்டும் என்பதைத் திருமூலர் அறிவுறுத்துகிறார். அதாவது குரு வழிபாடு செய்வதற்கு மாலைகள் இன்றியமையாதன. அவற்றுள் இன்றியமையாத சிறப்பை உடைய மாலை கொல்லாமை என்னும் பண்பே எனக்காட்டி விளக்குகிறார். இக்கருத்தினையே சிவஞான சித்தியார் உரையில் ‘கொல்லாமை என்னும் அறம் ஞானபூசையிலும் முதல் மலராகக் கொள்ளப்படும் சிறப்புடைத்து’என சிவஞான முனிவர் குறிப்பிடுகிறார். உயிர்களைக் கொல்வோரின் இழிவைத் திருமூலர், பிற உயிர்களைக் கொல்லும் கொடியவர்களை வலிமை பொருந்திய எம தூதர்கள், வலிமையானக் கயிற்றினால் கட்டி நரகத் தீயில் வதைப்பார்கள்என்பதை

“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை

வல்லடிக் காரர் வலிக்கயிற்றால் கட்டிச்

செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை

நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே”(Manikkavasakan, 2016)

என்று குறிப்பிட்டு, கொல்லாமை நெறியைக் கடைபிடித்து அற வாழ்வினை வாழ முற்பட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

**புலால் மறுத்தல்**

ஒரு உயிரைக் கொன்று புலாலாய் உண்பவர்களிடத்தில் அருள்தன்மை இருக்காது. அருள்தன்மை இல்லாதவரிடத்தில் அறம் செய்யக்கூடிய எண்ணமும் இருக்காது. எனவே தன்னுடைய ஊன் பெருக்கத்திற்காகப் புலாலை உண்பவரிடத்தில் அருள் தன்மை சிறிதும் இருக்காது என்பதை வள்ளுவர்,

“தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்

எங்ஙனம் ஆளும் அருள்”(kanniyappa nayakkar, 1968)

எனக் காட்டுகிறார்.

திருமூலர் புலால் உண்பது இழிவு என்றும், அதனை உண்பவர்களின் உடலை எம தூதர்கள் பலரும் காணப்பற்றி இழுத்து கரையான்போல அரித்துக் கொன்று, பற்றி எரியும் நரக நெருப்பில் மல்லாக்கத் தள்ளிப் புரட்டி எடுப்பார்கள் என்று,

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை

எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்

"செல்"லாகப் பற்றியத் தீவாய் நரகத்தில்

மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே" (Manikkavasakan, 2016)

எனக் குறிப்பிடுகிறார். அற வாழ்வுக்குத் தடையாகப் புலால் உண்ணுதல் இருக்கிறது. எனவே அந்த புலால் உண்ணும் தன்மை கூடாது என்பதை இவ்வாறாக திருமூலர் வலியுறுத்துகிறார்.

**பிறர் மனைவியை விரும்புதல் கூடாது**

இல்லற வாழ்விற்கு உறுதுணையாக இருக்கும் மனையாளை விடுத்து, பிறன்மனை விரும்புவது அறச்செயல் அன்று. அறச் செயலற்ற அதனை உலக வாழ்வின் உண்மைப் பொருளை உணர்ந்தவர்கள் விரும்ப மாட்டார்கள். திருவள்ளுவரும் பிறன்மனை நயத்தலின் இழிவை பிறனில் விழையாமை என்னும் அதிகாரத்தில் விளக்குகிறார். திருமூலர் உவமைகளின் மூலம் பிறன்மனை நயத்தலின் இழிவை விளக்கிக்காட்டுகிறார்.

“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே

காத்த மனையாளைக் காமுறுங் காளையர்

காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்

ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே”(Manikkavasakan, 2016)

அதாவது தன் மனைவியை விரும்பாது, பிறன் மனைவியை விரும்பும் தன்மை, தன் வீட்டில் காய்த்துக் கனிந்துள்ள பலாப்பழத்தை உண்ண விரும்பாமல், எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்துக்கு ஆசைப்பட்டுத் துன்புறுவது போன்றது என்றும், நன்றாகப் பாதுகாத்து வளர்ந்த மாமரத்தின் பழத்தைப் பொன்போல எண்ணி உண்ணாது அதை புதைத்து விட்டு, அயலான் வீட்டில் வளர்ந்த புளிய மரத்தின் நுனிக் கிளையில் ஏறிக் கீழே விழுந்து கால் ஒடிந்த தன்மை போன்றது என்றும், பிறன் மனை நயத்தலின் இழிவை, உவமை மூலம் குறிப்பிட்டு, பிறன் மனை விரும்புதல் அற வாழ்வுக்கு ஏற்றதல்ல என திருமூலர் கூறுகின்றார்.

**கள்ளுண்ணுவதால் அறநெறியில் இருந்து விலகுவர்**

கள்ளுண்ணுதல் என்னும் செயல் மூலமாகப் பொருளை மட்டுமின்றி, எல்லா வகையான தீமைகளின் வாயில்களாக அமைந்து, அறிவையும் அழிக்கும் தன்மையை அடைவர். கல்லுண்ணுதல், அறத்திற்கு மாறான செயலாகவும், சிவபெருமானை அடைவதற்குத் தடையாக இருக்கும் தன்மையானதுமாகவும் உள்ளது என திருமூலர் காட்டுகின்றார். அதாவது பசுக்கள், அரிசி கழுவிய நீரை உண்டு பழகி விட்டால் பின்பு குளத்தில் உள்ள தூய நீரை நாடிச்செல்லாது, அக்கழு நீரையே எண்ணி உண்ணும். அதுபோல கள்ளின் சுவையை அறிந்து, இதுவே வலிமையான பானம் எனக்கருதி வாழ்பவர்கள், மக்கள் இயல்பில் நீங்கியவர்கள். அவர்கள் உண்மையான இன்பம் சிவபெருமானின் திருவடி இன்பம் என்பதை உணராதவர்கள் என்பதை,

“கழுநீர்ப் பசுப்பெறிற் கயந்தொறும் தேரா

கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும்

முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்

சிவன்றன் சிவானந்தத் தேறலே” (Manikkavasakan, 2016)

என்று குறிப்பிடுகிறார். சிவபெருமானின் திருவடியை அடைவதற்கு கள்ளுண்ணல் தடையாக இருக்கிறது என்று கூறிய திருமூலர், அதனை உண்பவர்களின் இழி நிலையையும் குறிப்பிடுகிறார். அதாவது தடுமாற்றத்திற்கும் அறியாமைக்கும் ஏதுவாகியகள், வாய்மை முதலிய நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். அதனால் அதனை உண்பவர் நாணம் இன்றித் தெருவில் திரிகின்ற பொது மகளிர் இன்பத்தையே பெற்று, தம் இல்லாளொடு முயங்கிப் பெரும் இன்பத்தைப் பெறாது துன்பப்படுவர் எனச் சுட்டிக்காட்டி, கள்ளுண்ணல் சமய ஒழுக்கம் என்று கூறுபவரை மறுத்து அறமற்ற செயலாகிய கள்ளுண்ணல் வாழ்வுக்குத் துன்பத்தையே தரும் என்று திருமூலர் கூறுகின்றார்

**நடுவு நிலையில் நிற்றல்**

நடுவு நிலைமை என்பது அறங்கூறும் அவையத்தாருக்குச் சிறப்பான அறமாகக் கூறப்படுவது. எளியவன், வலியவன், செல்வந்தன், வறியவன் என்று பாராது அனைத்து தரப்பினரையும் ஒன்றாக நோக்கும் தன்மையே நடுவு நிலைமை எனப்படும். நடுவு நிலைமை என்பது பொருளைச் சமமாக நின்று அளக்கும் துலாக்கோல் போல இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர்,

“சமன்செய்துசீர்தூக்குங்கோல்போல்அமைந்தொருபால்

கோடாமைசான்றோர்க்கணி”(kanniyappa nayakkar, 1968)

என்று குறிப்பிடுகிறார். திருமூலரும் நடுவு நிலைமையில் பிறழாதவர் ஒருபோதும் நரகம் புகார். தேவராய்த் துறக்கமும் உகுவார். அது மட்டுமன்றி ஞானமும் பெற்று வீட்டுலகத்தினை அடையும் நிலையானப் பயனைப் பெறுவார் எனக் கூறுகிறார். இதனையே திருமூலர்,

"நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை

நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை

நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்

நடுவு நின்றார் வழி யானும் நின்றேனே"(Manikkavasakan, 2016)

என்று பாடுகிறார். அது மட்டுமல்லாமல் நடுவு நிலைமையைக் கடை பிடிப்பவர்கள் மால் அயனாம் நிலைகளைப் பெருதலேயன்றி, சிவஞானிகளாய் சிவமாகும் தன்மையையும் பெறுவர் எனக் கூறுவதோடு, நடுவு நிலைமை என்பது அறமாகும் எனக் கூறுகிறார். இவ்வாறாக அற வாழ்வினை வாழ்வதற்கான வழிகளைத் திருமூலர் சொல்கிறார்.

**அடியார்களுக்குத் தானமிடுவது சிறந்த அறம்**

தானத்தில் சிறந்தது அடியார்களுக்கும் தொண்டர்களுக்கும் செய்யும் தானம் ஆகும் எனத் திருமந்திரம் கூறுகிறது. இதனை மகேசுவர பூசை என்பர். திருக்கோயிலிலுள்ள இறைவனுக்கு நைவேத்தியம் முதலியன செய்யலாம். இறைவன் அதை ஏற்றுக்கொள்ளுவான். அதே நேரத்தில் இறை அடியார்களுக்கும் தானம் கொடுக்கும்பொழுது இறைவன் பதின்மடங்கு மகிழ்ச்சி அடைகின்றான். காரணம், அடியார்கள் நடமாடும் கோயிலாகத் திகழ்கிறார்கள். படமாடும் கோயில்களை விட உயர்ந்தவர்கள் இறை நிலையில் நிற்பவர்கள். அவர்களுக்கு உணவளிக்கும்போது அனைத்துயிர்களும் தாங்கள் உணவருந்திய மகிழ்ச்சியைப் பெறுகின்றன என்று இறைவனே கூறியதாகத் திருமூலர் எடுத்துக் காட்டுகிறார். செல்வராகிய நீங்கள் உங்கள் பெயர் வரலாற்றில் நிலைக்கும் பொருட்டுப் பலவிதமான தானங்களைச் செய்து வருகின்றீர்கள். அந்தணர்களுக்கும், கற்றோர்களுக்கும் கிராமங்களை எழுதி வைக்கின்றீர்கள். நிலங்களைத் தருகின்றீர்கள். இறைவனை மகிழ்ச்சிப்படுத்த செய்யும் நோக்குடன் பல திருக்கோயில்களைக் கட்டுகின்றீர்கள். குடமுழுக்கு விழா நடத்துகின்றீர்கள்.

இவையெல்லாம் போற்றத்தக்கவைதான். ஆனால், நீங்கள் அன்புடன் ஈகை உணர்வுடன் கடவுள் சிந்தனை மிக்க ஞானி ஒருவருக்கு ஒரு வேளையாகினும் அளிக்கும் உணவினால் கிடைக்கக்கூடிய பயனுக்கு வேறு எந்தக் காரியங்கள் செய்தாலும் ஒப்பாகாது என்பதே உண்மை. இந்தத் தெளிவை திருமந்திரம் 1857, 1860 ஆகிய மந்திரப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. திருமந்திரத்தில் அறம் தொடர்பாக இவைபோன்ற பாடல்கள் காணப்படுகின்றன.

**முடிவுரை**

ஒட்டு மொத்தமாக இக்கட்டுரையை நோக்கும்போது அற வாழ்வின் அடிப்படைக் கருத்தியலைத் தனித்தனியாகக் காட்டுகிறது. அற நெறிக்கான வித்தை மனிதர்களிடத்தில் புகலும் தன்மையானதாக இருப்பதை திருமந்திரப் பாடல்களின் கருத்துச் செறிவுகளே பறைசாற்றுகின்றன. எல்லோரும் பின்பற்றத்தக்க எளிய அறங்களைச் செய்வதற்கானத் தன்மையைப் பெறுவதற்கு முதலில் நிலையாமை உணர்வை உணர வேண்டும் என்று கூறுகிறது.

கொல்லாமை, ஊண் உண்ணாமை, பிறர் மனைவியை விரும்புதல் கூடாது, கள்ளுண்ணுதல் கூடாது முதலிய நெறிகளைக்கடைபிடிக்க வேண்டும் எனக் கூறும் திருமூலர், நடுவு நிலைமையை அனைவரும் கடைபிடித்தலின் தேவையை உணர்த்துகிறார். மேலும், அடியார்க்கு தானமிடுதல் முதலியவையும் அறக்கோட்பாட்டின் நெறி என்று திருமூலர் கூறுவதைக் காணமுடிகிறது.

திருமூலரின் திருமந்திரம் அற நெறியைமறவாது மக்கள்கடைபிடிக்க வேண்டும். திருமூலரின் அறக் கொள்கைகளைக் கடைபிடித்து ஒழுகும்போது அன்பும் அருளும் பெருக, நிலைபெற்ற நிலையான வாழ்வினை மனித இனம் பெற முடியும்.

## Refernce

[1] Kanniyappa Nayakkar, R., (1968), Tirukkural , Vanathi Publications, Chennai.

[2] Manikkavasakan.Jha(V.U), (2016), Thirumoolar Thirumantram, Uma Publications, Chennai.

[3] Puliyur Kesikan, (2009), Tolkappiyam, Bari Nilaiyam, Chennai.

[4] Ramasamy.M., (1992), Caste Norm and Justice Norm, Thiruvarangam Publishing House, Rasipuram, Tamil Nadu.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*